11th March 1964]

Madras, has since carried out his investigation and submitted a report. Copies of the report have been sent to the Government of Kerala and their reply is awaited.

(b) No.

### நிலக்கோட்டையில் அரசாங்க ஆட்டுப் பண்ணை நிறுவுதல்

*225 கேள்வி.—திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: கனம் உள் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

மதுரை ஜில்லா, நிலக்கோட்டை தாலூகா, பாலமேடு பிர்க்காவில் ஓர் அரசாங்க ஆட்டுப் பண்ணை அமைக்கும் உத்தேசமுண்டா?

**கனம் திரு. பூ. கக்கன்:** இல்லை.

**திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்:** தலைவர் அவர்களே, பாலமேடுப் பகுதியைப்பற்றி கனம் அமைச்சர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். ஆடுகள் வளர்ப்பதற்கு மிகவும் வசதியான இடம். ஆகவே, இந்த இடத்திற்கு இல்லை என்று சொல்லாமல் அந்தப் பகுதியில் ஆட்டுப்பண்ணை வைப்பதுபற்றி அரசாங்கம் மீண்டும் பரிசீலனை செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. பூ. கக்கன்:** மதுரை ஜில்லாவைப் பொறுத்தளவில் ஆட்டுப்பண்ணை வைப்பதிலும், ஆடுகள் வளர்ப்பதிலும் அதிக சிரத்தை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். மத்திய சர்க்காரும் இதற்கு உதவி செய்து கொண்டிருக்கிறார்கள். முதலாவதாக 804 ஏக்கர் நிலம் கொடுக்கப்பட்டிருக்கிறது. மேலும் 500 ஏக்கர் வேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். அதற்கு வேண்டிய ஏற்பாடு செய்யப்பட்டு வருகின்றது. மேலும் 'ஷீப் ரிசர்ச் இன்ஸ்டிட்யூஷன்' சொற்ப அளவில் இதன் வளர்ச்சிக்காக வேலை செய்து கொண்டிருக்கிறார்கள் மேலும் செங்கற்பட்டு ஜில்லாவில் காட்டுப்பாக்கத்திலும், தென்னாற்காடு ஜில்லாவில் சின்னசேலத்திலும், நீலகிரி ஜில்லாவில் உதகமண்டலத்திலும் 'ஷீப் பாம்' ஏற்படுத்தி நல்லமுறையில் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். இவற்றினுடைய வெற்றிகரமான நிலையைப் பார்த்து மேலும் முயற்சிகள் எடுத்துக் கொள்ளலாம்.

**கனம் சபாநாயகர்:** கேள்விகள் முடிவடைந்தன.

**[Note.—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member]**

## II—VOTING ON DEMANDS FOR GRANTS FOR 1964-65.

### (1) DEMAND NO. XX—INDUSTRIES.

### (2) DEMAND NO. XL—CAPITAL OUTLAY ON INDUSTRIAL DEVELOPMENT.

THE HON. SRI R. VENKATARAMAN: Sir, on the recommendation of the Governor, I move—

"That the Government be granted a sum not exceeding Rs. 5,35,00,300 under Demand No. XX—Industries."